கடலூர் மாவட்டத்திற்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளுக்கும் மற்றும் கழக நிகழ்ச்சிகளுக்கும் வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர் மாவட்டத்தில் வருகின்ற 25.11.2024 திங்கட்கிழமை அன்று கடலூர் கம்மியம் பேட்டை புனித வளவனார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் கடலூர் மாவட்டத்திலுள்ள 683 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட அரங்கில் நடைபெறும் அனைத்து துறைகள் சார்பாக நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டத்திற்கும், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்புஅணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்திற்கும் மற்றும் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழாவிற்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள் வழங்குவதற்கும் வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வருகின்ற 25. 11. 2024 திங்கள்கிழமை காலை 9 .00 மணி அளவில் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்டில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அது சமயம் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்,வட்ட,வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர், மண்டலக்குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமை! முத்து.மகேந்திரன் வரவேற்புரை!

# பூம்புகார் மேலையூர் முத்து.தேவேந்திரன் இல்ல திருமண வரவேற்பு விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் மணமக்களை வாழ்த்துகிறார்!

மயிலாடுதுறை, நவ. 23 - மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் மேலையூர்முத்து.தேவேந்திரன்இல்ல திருமண வரவேற்பு விழா இன்று (24.11.2024 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 3.00 மணிக்கு கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் தலைமையில் மயிலாடுதுறை சிக்னேச்சர் மஹாலில் நடைபெறுகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் பூம்புகார் மேலையூர் முத்து. தேவேந்திரன்சீர்காழி ஒன்றியக் குழு தலைவர் கமல ஜோதிதேவேந்திரன் இணையர்களின் மகள் டி.அபிநயா, சேலம் மாவட்டம் அம்மாபேட்டை எஸ்.மனோகரன்ராஜேஸ்வரி மகன் எம்.அபிஷேக் இவர்களின் திருமணம் கடந்த 20ம் தேதி சேலத்தில் நடைபெற்றதை முன்னிட்டு திருமண வரவேற்பு நிகழ்ச்சி (24ம் தேதி) மாலை 6.00மணிக்கு மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. திருமண வரற்ப்பு விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமை தாங்குகிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன் வரவேற்புரை யாற்றுகிறார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சிர்காழி கிழக்கு ஒன்யிச் செயலாளர் பஞ்சுகுமார், சீர்காழி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஜி. ஜெ.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமண விழாவில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கலந்து கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். திருமண விழாவில் நகர்புற வளர்ச்சித்துறைஅமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணி மற்றும் நிர்ப்பாச னத்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், பள்ளி கல்வித்துறைஅமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில் மற்றும் வர்த்தகத் துறைஅமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில மருத்துவம், ஊரக நலப்பணிகள் இயக்குநர் ஜெய. ராஜமூர்த்தி, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மூவேந்தர் முன்னேற்ற கழக தலைவர் ஸ்ரீத ர் வாண்டையார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரி, தமிழ்மாநில காங்கிரஸ் கட்சி மாநில செயலாளர் தினகரன், மாவட்டக் கழகச் செலயாளர்கள் சு.கல்யாணசுந்தரம், துரை சந்திரசேகரன், பூண்டி கே.கலைவாணன், ஏ.எம். எச்.நாஜிம், என்.கௌதமன், கா.அண்ணாதுரை, மயிலாடுதுறை நாடாளு மன்ற உறுப்பினர் ஆர். சுதா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜித்து (எ) ராஜரெத்தினம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த. சோழராஜன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன, சட்ட மன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், எஸ்.ராஜ்குமார், டி.கே.ஜி.நீலமேகம், கே.பி. சங்கர், சபா.ராஜேந்திரன், கோ.ஐய்யப்பன், மாநகராட்சி மேயர்கள் சன்.இராமநாதன், என்.தினேஷ் குமார், சு.ப.தமிழழகன், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம்பூபதி, கலந்து கொள்கின்றனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என். செந்தில், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் பொன்.ராஜா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.





கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# "கலைஞரின் கண்மணி"யே! கண்மூடிப் போயினையோ?



கலைஞரின் கண்மணியே!
கண்மூடிப் போயினையோ
கழகம் என்னும்
மலைமீதில் ஏற்றிவைத்த
மணிவிளக்கே! தமிழர்தம்
மாண்பை இந்த
உலகுக்கு மெய்ப்பித்தே
உலாவந்த திருமகனே!
உயிர்மூச் செல்லாம்
தலையாய தமிழ்க்கென்பாய்!
தந்தாயோ அதை! எம்மைத்
தவிக்க விட்டே?

தான்வேண்டும் இலட்சியத்தில்
தடம் மாறா திருந்தவனே!
தருக்கம் செய்தே
ஏன்வேண்டும் நமக்கெல்லாம்
"இன்பத் திராவிடம்"
எனவி ளக்கித்
தேன்வேண்டும் வண்டுபோல்
திளைக்காத நின்அறிவுத்
திறனைக் கண்டு
"வான்"வேண்டும் என்றுன்னை
வரவழைத்த தோ?எம்மை
வாட விட்டே!

சரஞ்சரமாய் மாலைகள்உன்
சாதனைக்கே! அரசியல்
சதுரங்க த்தில்
திரும்பியன்றோ பார்க்கவைத்தாய்
தில்லியினைத் தமிழகத்தின்
திக்கு நோக்கி!
விரும்பிஉன்றன் ஆற்றலினை
வெளிநாட்டார் எண்ணி எண்ணி
வியக்கும் நேரம்,
அரும்பிய பூ உதிர்ந்ததுபோல்
அகன்றாயே! எமைத்துயரில்
ஆழ்த்தி விட்டே!

முள்ளிருக்கும் பலாப்பழம்போல்
முகமிருக்கும் கோபத்தில்!
முனைந்து பார்த்தால்
உள்ளிருக்கும் சுளைபோலும்
ஒப்பற்ற அன்பிருக்கும்
உன்னி டத்தில்!
கள்ளிருக்கும் பூவைப்போல்
கள்ளமின்றிச் சிரிப்பவனே!
கலைஞர் நெஞ்சில்
பிள்ளையைப்போல் தவழ்ந்தவனே!
பிரிந்தாயே எமைக் கண்ணீர்
பெருக விட்டே!

கண்டிப்பில் பெரியாராய்,
கனிவினில் அண்ணாவாய்,
கலைஞ ரோடு
தொண்டுக்குத் துணைநின்ற
தூயவனே! தூங்காமல்
தொழில்அ மைச்சாய்
எண்டிக்கும் புகழ்சேர்த்த
ஏந்தல்நீ விழிமூடி
ஏன்ப டுத்துக்
கொண்டாயோ நம்கழகக்
குடும்பத்தைக் கண்ணீரில்
குளிக்க விட்டே?

செந்தமிழ் முழங்கிவந்த
திருவாயும் ஒய்ந்ததுவோ!
"தியாக ராஜ
சுந்தர" ப்பொன் வதனம் அந்தோ!
சுடுகாட்டில் சாய்ந்ததுவோ!
"சூரி யத்தீ"
அந்தியிருள் வட்டத்தின்
அலைகளுக்குள் வீழ்ந்ததுவோ!
ஐய கோ! நின்
மந்திரப்பூம் புன்னகையை
மரணம்தான் தின்றதுவோ!
மன்னிப்போமோ?

புன்னகையை மறப்போமோ?
போர்க்குணத்தை மறப்போமோ?
புவியில் மூத்த
தென்மொழியாம் தமிழ்மொழியைச்
செம்மொழியாய் அறிவிக்கும்
தீர்மா னத்தை
முன்மொழிந்து மாநாட்டில்
முழங்கியதை மறப்போமோ?
முரசொ லித்த
மன்னவனே! நீபடைத்த
"மாநிலசு யாட்சி"யைத்தான்
மறக்கப் போமோ?

ஈடேதும் உண்டோ? இவ்
விழப்புக்கே! என்செய்வோம்
எங்கள் கண்ணீர்ச்
சூடாறும் முன், உன்னைச்
சுமந்திருக்கும் மேடையின்முன்
சூளு ரைப்போம்!
நாடாளு மன்றத்தில்
நடைபோட்ட சிங்கம்நின்
ஞாப கத்தைக்
கோடானு கோடிப்பேர்
கொண்டிந்த இயக்கத்தின்
கொள்கை காப்போம்!!!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை தர்மலிங்கம்
### நவம்பர் 24 (1986)



மாவட்டச் செயலாளராகவும், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார்.

1957ஆம் ஆண்டில் தி.மு.க. முதல்முறையாக பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டபோது கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் மிக நெருங்கிப் பழகியவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் பேரூர், 5வது வார்டை சேர்ந்த இரா.கீர்த்திவாசன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 22-11-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி
### நவம்பர் 24 (2008)



திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.

திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.

திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**